## சிறு பிள்ளைத்தனமாக செயற்படும் அரசியல்வாதிகள்

தென்னிலங்கை அரசியல்வாதிகளின் அண்மைக்கால அரசியல் செயற்பாடுகளை நோக்கும் போது அவர்கள் சிறுபிள்ளைத்தனமான செயற்படுவதாகவே கணிக்க வேண்டியுள்ளது. அவர்களிடம் ஆளுமை காணப்படவில்லை இறையாண்மை பற்றியோ சனநாயகத்தைப் பற்றியோ எதுவும் அறியாதவர்களாக அசட்டையாக நாட்டைப் பற்றியோ நாட்டு மக்களைப் பற்றியோ கிஞ்சிற்றும் கவலை கொண்டவர்களாக இல்லாது காணப்படுகின்றார்கள்.

அரசியல் நாகரிகம் மனிதப்பண்பு சனநாயகம் நீதிக்கோட்பாடுகள் எல்லாவற்றையும் உதறித்தள்ளி அரசியல் ஞானிகள் எழுத்தாளர்கள் உலக தலைவர்கள் மற்றும் மக்களின் முன்னே பரிகாசிக்கத்தக்க விதத்தில் நடந்து கொள்வது இலங்கைத் தீவையும் அதன் கீர்த்தியையும் சுருங்க வைத்து விடும் நிலைமையாகியுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பு யாப்பின்படி ஒரே ஒரு பிரதமர் மட்டுமே இருக்கமுடியும் என்ற நிலையில் ஒரு பிரதமர் கடமையில இருக்கும் போது இன்னுமொரு பிரதமரை நியமனம் செய்தது சனாதிபதியின் சட்டம் பற்றிய தெளிவின்மையையே காட்டுகிறது. ஒரு பிரதமரின் பதவி இல்லாது போவதற்கு அரசியல் யாப்புப்படி அவரின் இறப்பினால் அல்லது தானாக பதவி துறந்தால் அல்லது அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டால் மட்டுமே பிரதமர் பதவி வெற்றிடமாகும். அப்போது தான் வேறு ஒருவரை பிரதமராக நியமனம் செய்ய சனாதிபதிக்கு அரசியல் சட்டம் இடமளிக்கும். இவ்வாறு பிரதமர் பதவி வெற்றிடமாக்கப்படாத நிலையில் பதவியில் இருப்பவரை வெறும் ஒரு கடிதம் மூலம் ‘நீங்கள் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளீர்கள்’ என அறிவித்தல் கொடுப்பது சிறுபிள்ளைத்தனமானது. ஒரு அரசாங்க ஊழியரைக்கூட தகுந்த சட்ட விசாரணைகள் மேற்கொண்டு அதன் மூலம் பதவியிலிருந்து விலக்கக்கூடிய காரணங்கள் இருந்தால் ஒழிய பதவி நீக்கம் செய்யமுடியாது. அவ்வாறு செய்யப்படின் அது சட்டப்படி செல்லுபடியற்றது.

மேலும் சனாதிபதியின் அண்மைக்கால உரையில் தான் கரு ஜெயசூரியாவை பிரதமராக நியமிப்புது பற்றி கதைப்பதற்காக அவரை தனது அலுவலகத்திற்கு அழைத்ததாகவும் ஆனால் கரு ஜெயசூரியாவோ தான் மட்டும் வராது ரணில் விக்கிரமசிங்காவையும் கூட்டி வந்ததின் காரணமாக தனது எதிர்பார்ப்பை தட்டிக் கழித்துவிட்டார் எனவும் அதன் பின் சஜித் பிரேமதாசாவை கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் அழைத்ததாகவும் அவரை பிரதமராக்க எண்ணியுள்ளதாக

கூறிய போது சஜித் பிரேமதாசா தனது தலைவருக்கெதிராக தான் அவ்வாறு செயற்பட முடியாது என தன்னிடம் தெரிவித்ததாகவும் கூறியிருந்தார்.

இதனால் தெரிந்து கொள்வது என்னவெனில் கரு ஜெயசூரியாவும் சஜித் பிரேமதாசாவும் ஐக்கிய தேசியக் கட்சியிலும் அதன் தலைவரிலும் கொண்டுள்ள விசுவாசத்தை வெளிக்காட்டுகின்றது என்பதாகும். அதேசமயம் சனாதிபதி ஐ.தே.கட்சிக்குள்ளே பிளவை உண்டு பண்ணும் விதத்தில் செயற்பட்டுள்ளார் என்பதும் தெளிவாகின்றது. அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து சனாதிபதி 2014ம் ஆண்டு வெளியேறி ஐ.தே.கட்சி அணியில் சனாதிபதித் தேர்தலில் நின்ற போது அவர் கரு ஜெயசூரியா சஜித் பிரேமதாசா போன்றவர்களைப் போலல்லாது அவரது கட்சித் தலைமைக்கு விசுவாசம் அற்றவராக செயற்பட்டதை இங்கு பதிவு செய்தல் முக்கியமானதாகும். இன்னும் அவர் அப்பம் சாப்பிட்டு கை காயுமுன்னே கட்சி தாவினார் என்ற கதை இன்றும் கதைக்கப்படுகின்றது. தற்போது அவர் பல்டி அடித்து மீண்டும் ராஜபக்ஷா அணியிரனுடன் சேர்ந்தது வியப்புக்குரியதல்ல.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது மஹிந்த அணியினரையும் ஐ.தே.கட்சி அணியினரையும் ஊழல்வாதிகள் என சனாதிபதி தேர்தல் பிரச்சாரங்களின் போது கூறி வந்தார். தனது சுதந்திரக் கட்சி மட்டுமே ஊழல் அற்றது எனவும் ஊழலுக்கு எதிராக தான் வீதியில் இறங்கிப் போராடவும் தயாராக முன்நிற்பேன் என முழக்கமிட்டிருந்தார். ஆனால் இன்று பெரிய ஊழல்வாதிகளின் கூட்டணியில் தானும் ஒன்றிணைந்து செயற்பட முடிவெடுத்தமை மூலம் அவரின் காலத்துக்கக் காலம் கதையை மாற்றம் செயற்பாட்டை மக்கள் புரிந்து கொள்ளமுடியும்.

**இந்த புதிய அரசு ஊழல் அதிகாரத் துஸ்பிரயோகம் கிரிமினல் குற்றங்கள் ஆகியவை சாட்டப்பட்டு விசாரணைகளில் உள்ள வழக்குகளையும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளையும் சி.ஐ.டி. விசாரணைகளையும் எவ்வாறு கையாளப் போகின்றார்களென உன்னிப்பாக அவதானிக்க வேண்டியுள்ளது. இந்த அடாவடித்தனம் எல்லாம் தங்கள் மேலுள்ள குற்றச்சாட்டுக்களினின்றும் மீளுவதற்கே என்பதைப் புரியாது எமது தமிழ் தான்தோன்றித் தலைவர்கள் மஹிந்தாவை ஆதரிக்க வேண்டுமென ஆதரித்து பேசுவது வியப்புக்குரியது.**

மேலும் சனாதிபதி சிறிசேன அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் ரணில் விக்கிரமசிங்க கூடிய உறுப்பினர்களை காட்டி பெரம்பான்மையை நிலை நிறுத்துவாராயின் தான் அதன்பின்னர் சனாதிபதி பதவியில் தொடர்ந்திருக்க மாட்டாரென தெரிவித்திருந்தார். நேரத்திற்கு நேரம் கதைகளை மாற்றிப் பேசுவதும் ஒரு அணியிலிருந்து மாற்று அணிக்கு தாவிச் செல்வதுமான நேர்மையற்ற கொள்கைகளை கொண்டவரான சிறிசேனா பெரும்பான்மையை ரணில் காட்டும்போது தனது சனாதிபதி பதவியிலிருந்து வெளியேறுவாரா? என்பது கேள்விக்குறியாக தொக்கி நிற்கின்றது.

இதற்கிடையில் ஐ.தே.க.வை சேர்ந்த அமைச்சராயிருந்த மத்தும பண்டாரவின் தகவல்படி கொலைச்சதி பற்றி தகவல் கொடுத்த நாமல் குமாரவுக்கும் டி.ஐ.ஜி.நாலக டி சில்வாவுக்கும் இடையிலான ஒலிநாடா சம்பாஷணை ஒரு அரங்கேற்றப்பட்ட அரசியல் நாடகமென்றும் கூறப்படுகின்றது. அதனை வைத்துத்தான் அரசியல் மாற்றத்தை அதிரடியாக செய்ய சனாதிபதிக்கு முடிவெடுக்கும் நிலைமை ஏற்பட்டதாக வெளிப்படுத்தக் கூடியதாக இருந்தது எனப்படுகின்றது. நாமல் குமார தற்போது ஒரு புதுக்கதையாக அந்தக் கொலை சூழ்ச்சிக்கு பின்னால் சரத் பொன்சேகாவும் ரணிலும் இருந்ததாகவும் கூறுகின்றார். அத்தோடு அம்பாறையில் வைத்து ஒரு பேட்டியில் நாலக்க டி சில்வா உண்மைகளை ஒத்துக்கொண்டு வாக்கு மூலம் அளித்துள்ளதால் அவரை பொது மன்னிப்பு அளித்து வெளியில் அனுப்பலாம் என்று சிபாரிசும் செய்திருப்பது அவர்களுக்குள் ஏதோ ஒரு பிணைப்பு உள்ளதென்பதை ஊகிக்க வைக்கின்றது. ஒரு போலி நாடகத்தை அரங்கேற்றி நாட்டின் அரசியலில் பெரும் களேபரத்தை உருவாக்கி முழ உலகத்தின் கண்முன்னே சனநாயக விரோத நாடு என பெயர் வாங்க வைத்துவிட்டது.

கரு ஜயசூரியா தனது பாராளுமன்ற சபாநாயகர் பதவியை வெகு நேர்த்தியாகவும் சனநாயக விழுமியங்களுக்கு அமைவாகவும் பாராளுமன்ற ஒழுங்கு விதிகளுக்கு மாறுபடாமலும் செயற்படுவது வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் கவர்ந்துள்ளது. வெளி நாட்டுத் தவைர்கள் பல விதத்தில் தங்களது அதிருப்தியை வெளிக்காட்ட ஆரம்பித்துள்ளனர். ஒத்துக்கொள்ளப்பட்ட பணக் கொடுப்பனவுகளை முடக்கியுள்ளார்கள். இனிமேல் மீன் ஏற்றுமதித் தடை ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நிறுத்தல் எரிபொருள் கொள்வனவுத்தடை என இலங்கையின் பொருனாதாரத்தில் நெருக்கடி நிலைாயை உண்டுபண்ண தொடங்குவார்கள்.

குவேனியால் கொடுக்கப்பட்ட சாபம் இலங்கையை முன்னேற்றமடைய விடாது என்பது சிங்கள கலைஞர்களினால் ஒரு நாடகத்தில் கூறப்பட்டது. விஜயன் குவேனியை கைவிட்டு தென்னிந்தியாவிலிருந்து ஒரு அரசகுமாரியை மணமுடித்து வந்தபோது ‘ நீயும் உனது பரம்பரையும் ஒரு காலமும் நிம்மதியாக அரசாள மாட்டார்கள் ‘ எனக் குவேனி இட்ட சாபம் இன்றும் ஒரு முழம் ஏற இரண்டு முழம் சறுருக்கும் நிலைமையாகத் தொடருகின்றது.